


01. 12. 2025

## தலைப்புச் செய்திகள்

- வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகள் உள்ளிட்ட பிரச்சனைகளில் விவாதம் கோரி எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.
- நாட்டின் வளர்ச்சிக்கு எழுச்சியூட்டும் தளமாக நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- டிட்வா புயல் பாதிப்புகள் குறித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமையில் உயர்நிலை ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது.
- தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு பேரணியில் பள்ளி மாணாக்கர் பங்கேற்றனர்.
- சாண்டியாகோவில் உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

மக்களவை

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் இன்று தொடங்கிய நிலையில், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்த விவாதம் கோரி எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

அவையில் இன்று கேள்வி நேரம் தொடங்கியவுடன் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகள் உள்ளிட்ட பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சியினர் முழக்கமிட்டனர்.

எதிர்கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கைக்கு அதிருப்தி வெளியிட்ட அவை தலைவர் திரு.ஓம்.பிர்லா அவை அலுவல்களுக்கு ஊறுவிளைவிப்பது முறையற்றது என்று குறிப்பிட்டார்.

அவைத்தலைவரின் கோரிக்கைக்கு செவி மடுக்காமல், எதிர்கட்சியினர், தொடர்ந்து அமளியில் ஈடுபடவே, அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது அமளி தொடரவே அமளியின் ஊடே புகையிலை மற்றும் அது சார்ந்த பொருட்களுக்கான வரி சார்ந்த மத்திய கலால் சட்ட திருத்த மசோதா 2025-ஐ மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவையில் தாக்கல் செய்தார்.

பான்மசாலா உள்ளிட்ட பொருட்களுக்கான வரி தொடர்பான சுகாதார பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு சட்டதிருத்த மசோதாவையும் அமைச்சர் தாக்கல் செய்தார்.

மணிப்பூர் சரக்கு சேவை வரி சட்ட திருத்த மசோதா 2025-யும் அவர் அவையில் கொண்டு வந்தார்.

ஜன் விஷ்வாஸ் சட்ட திருத்த மசோதா அறிக்கை மற்றும் வங்கி திவால் சட்ட திருத்த மசோதா தொடர்பான தேர்வு குழுக்களின் அறிக்கையை வெளியிடுவதற்கான கால நீட்டிப்பிற்கும் மக்களவை அனுமதி வழங்கியது.

உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சல் குழப்பத்தில் ஈடுபடவே மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக மக்களவையில் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மாநிலங்களவையின் புதிய தலைவரான திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை வரவேற்ற பிரதமர் திரு.நரேந்திரமோடி, ஒரு சாதாரண பின்புலத்திலிருந்து, நாட்டின் குடியரசு துணை தலைவராக, திரு.ராதாகிருஷ்ணன் உயர்ந்திருப்பது, நாம் நாட்டின் ஜனநாயகத்தின், வலிமையை, பிரதிபலிப்பதாக எடுத்துரைத்தார்.

அவரை வரவேற்பது, பெருமை மிகு தருணம் என்று கூறிய பிரதமர், அவரது வழிகாட்டுதலால், மாநிலங்களவை ஆக்கப்பூர்வமான விவாதங்களுடன் செயல்பட வாழ்த்தினார்.

மாநிலங்களவை துணை தலைவர் திரு.ஹரிவன்ஸும் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை வரவேற்று பேசினார்.

************

பிரதமர் - நாடாளுமன்றம்

நாட்டின் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு எழுச்சியூட்டும் தளமாக நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

குளிர் கால கூட்டத்தொடர் தொடங்குவதை ஒட்டி நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி புதிய உச்சங்களை எட்டி வருவதாக குறிப்பிட்டார்..

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான புத்துணர்வுடன் கூடிய நம்பிக்கையை இவ்வளர்ச்சி ஏற்படுத்துவதாக கூறிய அவர், ஜனநாயகத்தின் செயலாக்கத்திற்கு இந்தியா எடுத்துக்காட்டாக திகழ்வதாக கூறினார்.

கோவம் அல்லது வருத்தமான உணர்வுகளுக்கான போர்களமாகவோ, வெற்றி களிப்பிற்கான கருவியாகவோ குளிர்கால கூட்டத்தொடரை கருதக்கூடாது என்று அறிவுறுத்தினார்.

தேச வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான மன நிலையின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்த தலைமுறை இளையோருக்கு வாய்ப்புகளை உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

************

பிரதமர் - எல்லை பாதுகாப்பு படை

எல்லை பாதுகாப்பு படை நிறுவன தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி எல்லை பாதுகாப்பு படையினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

துணிச்சலுடனும், உறுதியுடனும் எல்லை பாதுகாப்பு படையினர் செயலாற்றுவதாக கூறிய பிரதமர் சவால்மிகுந்த பகுதிகளிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி நாட்டை இப்படையினர் பாதுகாப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

பேரிடர் காலங்களில் எல்லை பாதுகாப்பு படையினரின் மனிதநேய செயல்பாடுகளை பாராட்டிய பிரதமர் தேசத்தை காப்பதில் தொடர்ந்து சிறந்த சேவையாற்ற வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளார்.

************

குடியரசு தலைவர்

இந்தியா பொருளாதார சுதந்திரத்துடன் உலக அளவில் அதனை விரிவுபடுத்துவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் காலணி வடிவமைப்பு மேம்பாட்டு கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், சென்ற நிதியாண்டில் 2 ஆயிரத்து 500 மில்லியன் டாலருக்கு அதிகமான ஏற்றுமதியுடன் இத்துறை பொருளாதாரத்தை வலுவாக முன்னெடுத்து சென்றதாக குறிப்பிட்டார்.

வளர்ச்சி அடைந்த பாரத கனவை அடுத்த தலைமுறை இளையோர் பூர்த்தி செய்வார்கள் என்றும், குடியரசு தலைவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

************

முதலமைச்சர்

டிட்வா புயல் பாதிப்புகள் குறித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமை செயலர், வேளாண், வருவாய் துறை செயலர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் சென்னையில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

திருவள்ளுர் சென்னையில் இன்று மிக கன மழையும்,

காஞ்சிபுரம் செங்கல்பட்டு ராணிப்பேட்டை மாவட்டங்களில் கன மழையும் பெய்யக்கூடும் என்று வானிலை முன்னறிவிப்பு தெரிவித்துள்ளதை அடுத்து தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்வது குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

************

முதலமைச்சர் - பூங்கா

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில் 611 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள பொழுதுபோக்கு பூங்காவை இன்று திறந்துவைத்தார்.

ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் தனியார் நிறுவனத்தால் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

************

பயிர் கணக்கெடுப்பு

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களின் கணக்கெடுப்பு பணிகள் இன்று தொடங்கின.

திருவாரூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பயிர்கள் கணக்கெடுப்பு பணிகளை வேளாண் துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இதனிடையே மயிலாடுதுறை மாவட்டம் ஆறுபாதி கிராமத்தில் டிட்வா புயல் காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த வாழை மரங்கள் தரையோடு சாய்ந்து சேதமானதால் அரசு உரிய நிவாரணம் வழங்க அப்பகுதியில் உள்ள வாழை விவசாயி கோரிக்கை விடுத்துள்ளார்.

வாய்ஸ்

************

எரிசக்திதுறை

தொழில்துறை எரிசக்தி திறனில் நாட்டிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று மாநில எரிசக்தி திறன் குறயீடு அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த நான்காண்டுகளில் மாநில அரசின் பல்வேறு முனைப்பு திட்டங்களால் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளதாக இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி தமிழகம் 55.3 சதவிகித மதிப்பெண்களுடன் முதல் இடத்தையும்,

ஆந்திர மாநிலம் 27.5 சதவிகித மதிப்பெண்களுடன் 2ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான சான்றளிக்கப்பட்ட பசுமை கட்டிடங்களை கொண்ட முதல் 3 மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழகம் திகழ்கிறது என்று இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

************

உலக எயிட்ஸ் தினம்

உலக எயிட்ஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி எயிட்ஸ் விழிப்புணர்வு பேரணிகள் நாடுமுழுவதும் நடைபெறுகின்றன.

மதுரை மாவட்ட எயிட்ஸ் தடுப்பு கட்டுப்பாட்டு அலகு சார்பில் பள்ளி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் இன்று துவக்கிவைத்தார்.

விழிப்புணர்வு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

அரியலூரில் இந்திய செஞ்சிலுவை சங்கம் மற்றும் எயிட்ஸ் தடுப்பு துறை சார்பில் ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி பள்ளி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை தொடங்கிவைத்ததோடு அப்பேரணியில் அவர் பங்கேற்றார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேளூரில் காவல்துறையினர், சமூகசேவை நிறுவனம், செவிலியர் கல்லூரி, சார்பில் நடைபெற்ற எயிட்ஸ் விழிப்புணர்வு பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

பெரம்பலூரில் நாட்டுப்புற கலைஞர்களின் கலை நிகழ்ச்சியுடன் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தையும் ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி துவக்கிவைத்தார்.

காஞ்சிபுரத்தில் ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் துவக்கிவைத்த விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான பள்ளி மாணாக்கர் பங்கேற்றனர்.

************

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மாவட்டத்தில் அண்மை மழை காரணமாக நீர்நிலைகள் நிரம்பியுள்ளதால் வேட்டாம்பாடி கிராமத்தில் உள்ள ஏரி மரங்களை பல்வேறு பகுதிகளில் இருந்து வலசை காரணமாக வந்த பறவைகள் ஆக்கிரமித்துள்ளன.

இதேபோல் வள்ளிபுரம் ஏரியில் உள்ள மரங்களிலும் லட்சக்கணக்கான பறவைகள் குவிந்துள்ளன.

வெண்போர்வை போர்த்தியது போன்ற மரங்களில் காட்சி அளிப்பதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்து வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

************

சிவசங்கர்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே நேற்று நேரிட்ட சாலை விபத்திற்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த சாலை விபத்தில் காயமடைந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை இன்று நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், அரசு ஓட்டுநர்களே இவ்விரு பேருந்துகளையும் இயக்கியதாக குறிப்பிட்டார்.

கடந்த 3 ஆண்டுகளில் நடைபெற்ற பெரிய விபத்து இது என்று கூறிய அவர் நேற்றைய விபத்து அஜாக்கிரதை காரணமாக நடைபெற்றிருக்க கூடும் என்றும், ஓட்டுநர்களுக்கு பணிச்சுமை உள்ளதாக என்பது குறித்து ஆராயப்படும் என்றும் தெரிவித்தார்.

இத்தகைய விபத்துகள் நடக்காமல் இருக்கும் பொருட்டு ஓட்டுநர்களுக்கும், நடத்துனர்களுக்கும் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் இந்த பயிற்சிகள் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

************

வானிலை

தென்மேற்கு வங்க கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்த டிட்வா புயல் தமிழ்நாடு புதுச்சேரி தெற்கு ஆந்திர கடல் பகுதிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்க கூடும் என்றும் சென்னை கடற்கரையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் நிலவும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடதமிழக கடலோர பகுதிகளில் மணிக்கு 55 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

************

மீனவர்கள் தூத்துக்குடி

தூத்துக்குடி மீனவர்கள் 6 நாட்களுக்கு பின்னர் இன்று மீண்டும் கடலுக்குள் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

ஹாக்கி

உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டி சாண்டியாகோவில் இன்று தொடங்கின.

வரும் 14ஆம் தேதிவரை நடைபெறும் உள்ள இப்போட்டியில் 24 அணிகள் பங்கேற்றுள்ளன.

இன்றிரவு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – நமீபியாவை எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது